2009 பிப்ரவரி 26] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி, அவரும் அவர்களுக்கு மாற்று இடம் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் சொன்னதைப் போல, மத்தியிலே இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர்களை உடனடியாகத் தொடர்பு கொண்டு, இரயில்வே அமைச்சகத்தோடு பேசி, ஒரு மாத காலத்திற்குள்ளாக அவர்கள் வேறு இடம் செல்வதற்குத் தமிழக அரசாங்கம் ஏற்பாடு செய்யும். அதுவரையிலே அவர்களைக் காலி செய்யாமல் இருப்பதற்கு அவகாசம் நீட்டித்துத் தரவேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. இன்றைக்கு முடிந்தால் நானேகூட சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலே பேசி, நம்முடைய குடிசை மாற்று வாரியத்தினுடைய அமைச்சர் அவர்களையும் சேர்த்து, இரண்டு பேரும் சேர்ந்து பேசி, ஒரு மாத காலம் அவகாசம் பெற்றுத் தந்து, அதற்கிடையிலே தமிழக அரசின் சார்பிலே அவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து தந்து, அதற்குப் பிறகு அவர்களை காலி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்ய, இரயில்வே நிருவாகத்தை வற்புறுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

(ஈ) கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே கத்திரிப்பள்ளியில் ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆந்திர அரசு, கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 80 கோடி ரூபாய் செலவில் அணை கட்டுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம் ஆகியோரும், விதி 55–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாகக் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இந்த அவையிலே வைக்கப்படுகின்ற ஏடுகளைக் குறித்துச் சொல்ல நான் ஆசைப்படுகின்றேன். உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றிய ஓர் ஏட்டினை நம்முடைய மாண்புமிகு

[டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்] [2009 பிப்ரவரி 26

உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்திருந்தார்கள். மிகப் பயனுள்ள ஏடாக அது இருக்கிறது என்பதைத் தெரிவித்து, அவர்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வருகின்ற ஞாயிற்றுக்கிழமை பிறந்தநாள் காணுகின்ற அன்னாருக்கு, எல்லாம் வல்ல இறைவன், பல்லாண்டு பல்லாண்டு வாழ்வதற்கு, நீண்ட ஆயுளைத் தந்து அருள வேண்டுமென்று காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

நம்முடைய அண்டை மாநிலங்கள் நம்மைச் சீண்டிப் பார்ப்பதையே வழக்கமாகக் கொண்டிருக்கின்றன. முல்லைப் பெரியாறு, பாலாறு போன்ற பல விஷயங்களிலே நம் அண்டை மாநிலங்கள், தமிழகத்தில் காவிரி போன்ற பல்வேறு பிரச்சினைகளில் நம்மைச் சீண்டிப் பார்ப்பதிலேயே கவனமாக இருக்கின்றன. அந்த வகையிலே இந்த நிகழ்விலே பள்ளிப்பட்டுக்கு மேற்கே இருக்கக்கூடிய கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 1971 ஆம் ஆண்டு கிருஷ்ணாபுரம் என்று சொல்லப்படுகின்ற அம்மப்பள்ளி என்று வழக்கமாக வழங்கப்படுகின்ற கிராமத்தின் குறுக்கே ஓர் அணையை அவர்கள் கட்டினார்கள். கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே அவர்கள் கட்டினார்கள். ஏறக்குறைய 200 மில்லியன் கன அடி கொள்ளளவு கொள்ளக்கூடிய அந்த அணை, எங்களுடைய பகுதிக்கு, குறிப்பாக பள்ளிப்பட்டு, பொதட்டூர்பேட்டை, நெடியம் பகுதிகளுக்கு வரக்கூடிய நீரைக் கட்டுப்படுத்துவதாக அமைந்திருக்கிறது. ஆகவே, எப்போதாவது மழைக் காலங்களில், அணை திறந்துவிடப்படுமா என்ற ஏக்கத்தோடு பார்க்கின்ற பார்வையாளராக அல்லது ஏக்கமுறுகின்ற மக்களாக எங்களுடைய பகுதி மக்கள் இருக்கின்றார்கள். இந்த ஆண்டுதான் அந்த —dam— அணை நிரம்பி திறந்துவிட்டார்கள். அதன் காரணமாக ground water level, நிலத்தடி நீர் சற்று உயர்ந்து குடிதண்ணீருக்குப் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது. இந்த நிலையிலே பள்ளிப்பட்டுக்கு மேற்கே 3 கிலோ மீட்டர் தொலைவிலே, கத்திரிப்பள்ளி என்ற கிராமத்தின் அருகிலே, ஒரு புதிய அணையை மீண்டும் அவர்கள் 80 கோடி ரூபாய் செலவிலே கட்டுவதாக அறிவித்து, அதற்குண்டான செயல்முறைகளிலும் அவர்கள் இறங்கியிருக்கிறார்கள். அதிகாரப்பூர்வமாக அந்த அரசினுடைய பொறியாளர் ஒருவரை நான் கேட்டு இந்த அவைக்கு நான் தெரிவிக்கின்றேன். ஏறக்குறைய 80 கோடி ரூபாய் செலவிலே அவர்கள் அந்த அணையைக் கட்டுகிறார்கள். அந்த அணையைக் கட்டுவதன்மூலமாக பள்ளிப்பட்டு தொகுதிக்கு மட்டுமல்ல; இங்கே இருக்கின்ற பூண்டி ஏரிக்கு வருகின்ற

2009 பிப்ரவரி 26][டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

நீர் வரத்துகூட முற்றிலுமாகவே நீக்கப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன. அதனால்தான் நான் பேசுகின்றபோதுகூட, நம்முடைய பட்ஜெட் உரையின் மீதான விவாதத்தில் பேசுகின்றபோதுகூட, தென்னக முதல்வர்களுடைய கூட்டமைப்பு அவசியம் என்று நான் கேட்டேன். சர்வஜ்னா சிலையை நிறுவுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கர்நாடக முதலமைச்சருடன் பேசி, அங்கே திருவள்ளுவர் சிலையை நிறுவுவதற்கு நம்முடைய முதலமைச்சரோடு அவர் பேசி, ஒரு சமரசம் காணும் நிலையைப்போல, இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக, தென்னக முதலமைச்சர்களுடைய கூட்டமைப்பு, முன்பு முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த காலங்களிலே நிறுவப்பட்டதைப்போல ஏற்படுத்தப்படவேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னேன். அந்த நிலைமை மீண்டும் வந்திருக்கிறது. ஆகவே, நம்மைச் சுற்றி இருக்கின்ற மாநிலங்கள், நம்முடைய நீர் ஆதாரத்தைத் தடுப்பதற்கு எல்லா வகையிலும் முயல்கின்றன. அந்த வகையிலே பள்ளிப்பட்டுக்கு மேற்கே கட்டப்படுகின்ற, விகுதகுஞ்சேரிப்பள்ளி என்று சொல்லப்படுகின்ற கத்திரிப்பள்ளி என்று colloquial-ஆகச் சொல்லுவோம். அது அரசாங்க ஆணைப்படி விகுதகுஞ்சேரிப்பள்ளி என்று சொல்லப்படுகின்ற இடம். அந்த இடத்திலே அவர்கள் அந்த அணையைக் கட்டுகின்றார்கள்.

அந்த அணை கட்டுவதைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால், சென்னை மக்களுடைய நீராதாரத்திற்கும், பள்ளிப்பட்டு தொகுதியினுடைய முழுமையான நீராதாரத்திற்கும் பொறுப்பான அந்தக் கொசஸ்தலையாறு, நீர் வரத்து அற்றுப் போகுமானால், மணலுக்குத்தான் பயன்படும். வேறு எதற்கும் பயன்படாது. அதுகூட சொல்லப் போனால், இருக்கிற கிராமங்கள் எல்லாம் அந்த ஆற்றை ஒட்டித்தான் அமைந்திருக்கின்றன. பள்ளிப்பட்டு தொகுதி என்பது ஆற்றின் இரு மருங்கிலும் இருக்கின்ற கிராமங்களைக் கொண்ட பகுதி. ஆகவே, தயவுசெய்து மிகுந்த கவனத்தோடு எந்த வகையானாலும் சட்ட ரீதியாக அல்லது ராஜ ரீதியாக, எந்த வ்கையினாலும் நீங்கள் நேரடியாகவோ எந்த வகையினாலும், தடுத்து நிறுத்தி, உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

TRUTH ALONE TRIUMPHS

[2009 பிப்ரவரி 26

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறு நதிநீர்ப் பிரச்சினைகள் இருக்கின்றபொழுது கொசஸ்தலையாற்றிலே மட்டும்தான் இந்தப் பிரச்சினை இல்லாமல் இருக்கிறது என்று நினைத்திருந்தோம். ஏற்கெனவே காவிரி நதிநீர்ப் பிரச்சினை. முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை, அதைத் தொடர்ந்து கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே அணை கட்டுகிற பாலாற்றுப் பிரச்சினை, அதே போன்று திருவலத்திலே அணை கட்டுகிற பிரச்சினை, அதைத் தொடர்ந்து இப்போது கத்திரிப்பள்ளியில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே ஆந்திர அரசு அணை கட்டுகிற இந்தப் பிரச்சினையும் இன்று எழுந்திருக்கிறது. இது நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்தின் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் ஒரு நல்ல ஆறாக இருந்து கொண்டிருக்கிறது. மழைக் காலங்களிலே நீர் வந்து, அது அந்தப் பகுதியிலே இருக்கிற மழை நீரைச் சேமிக்கிற ஒரு ஆறாகவும் இருந்து கொண்டிருக்கிறது.

அதேபோன்று, பூண்டி ஏரிக்கு நீர் வரத்து வருகிற ஓர் ஆறாகவும் இருந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று, இந்த ஆற்றின் குறுக்கே ஓர் அணையை கத்திரிப்பள்ளியிலே கட்டுவது மிகப் பெரிய ஒரு சிக்கலை ஏற்படுத்தும் என்றும், திருவள்ளூர் மாவட்டத்தினுடைய மக்கள் இன்றைக்குப் பிரச்சினையிலே சிக்கிக் கொண்டு இருப்பதாகவும் சொல்கிறார்கள். எனவே, இன்றைக்கு ஆந்திரத்திலே காங்கிரஸ் ஆட்சி, மத்தியிலே காங்கிரஸ் அரசு (குறுக்கீடு) காங்கிரஸ் தலைமையிலான அரசு இருக்கிறது. இருந்தாலும்கூட, நாங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருந்து கொண்டிருக்கிறோம். காங்கிரசினுடைய தலைமையிலேதான் இந்த ஆட்சியானது மத்தியிலே இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்திருக்கிறது. இணக்கமான ஒரு அரசாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தாலே — சொல்வார்கள்; 'முளையிலே கிள்ளி எறிய வேண்டும்' என்று சொல்வார்கள்; அதுபோல — இதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட்டால் நம்முடைய திருவள்ளூர் மாவட்டத்திற்கும், சென்னைக்கும் வருகிற குடிநீர்ப் பிரச்சினையை மிகப் பெரிய அளவிலே தடுப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, உடனடியாக நம்முடைய தமிழக அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய பொதுப்

2009 பிப்ரவரி 26] [திரு. கி. ஆறுமுகம்]

பணித் துறை அமைச்சர் அவர்களும் இதிலே சிறப்புக் கவனம் எடுத்து இந்த அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனப் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: நானா? (குறுக்கீடு) இல்லை, வேறு யாரும் பேசவில்லையா என்று கேட்டேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாமன்றத்திலே தெரிவித்த கருத்து உணர்வுபூர்வமான ஒன்றுதான். அதிலும் குறிப்பாக இந்த அணை கட்டினால் முதலிலே பாதிக்கப்படுவது இராமன் அவருடைய தொகுதிதான். அதனால்தான் எப்பொழுதுமே அமைதியாகப் பேசுகின்ற இராமன்கூட இன்றைக்குக் கோபப்பட்டு அண்டை மாநிலங்கள் நம்மைச் சீண்டிப் பார்க்கின்றன என்று சொன்னார். என்ன செய்வது? நம்முடைய geographical position அப்படி. ஆக, ஓடுகின்ற ஆறுகள் எல்லாம் அந்தப் பக்கத்திலே உற்பத்தியாகி நம்ம ஊர் வழியாக ஓடுகின்றபொழுது சில நேரங்களிலே அப்படிச் செய்து விடுகிறார்கள். ஆனால், அண்டை மாநிலங்களோடு நல்லுணர்வு காட்ட வேண்டும் என்றுதான் இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட கேரளத்தினுடைய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் மாண்புமிகு நண்பர் திரு. பிரேம்சந்தர் அவர்கள் எனக்கு phone செய்தார்கள். அவர்களுக்கு பாலக்காடு பகுதியிலே பயிர் காய்கிறது. கொடுக்க வேண்டிய நீரைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாக நீர் கொடுத்தால்தான் பயிர்கள் காப்பாற்றப்படும் என்று அவர் என்னைத் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசினார். "இருக்கின்ற நிலைமை எனக்குத் தெரியாது; அதிகாரிகளோடு பேசிவிட்டுத் தெரிவிக்கிறேன்" என்று சொன்னேன். உடனடியாக மறுபடியும் பேசினார். ஏன்? மாண்புமிகு கேரளத்து முதல்வரே என்னைப் பார்த்து, அவருடைய தொகுதியும் பாதிக்கிறதாம் இதிலே; எனவே, அதைக் கொஞ்சம் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று சொன்னார். ஆக, அண்டை மாநிலத்தினுடைய முதல்வர், அந்த நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கொஞ்சம் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டியாவது நாம் நம் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று எங்கள் அதிகாரிகளிடத்திலே தெரிவித்தேன். உடனடியாக அதை ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்ன பிறகுகூட, அவர் நேற்று இங்கு வருவதற்காகப் புறப்பட்டார். நான் சொன்னேன், நீங்கள்

வந்து என்னிடத்திலே கேட்டுத் தருவது அவ்வளவு பெருமை ஆகாது. உங்கள் அதிகாரிகளை மட்டும் அனுப்பி வையுங்கள் என்று சொன்னேன். அதிகாரிகளை அனுப்பி வைத்தார்கள். சட்டமன்றம் நடக்கின்றபோது சபாநாயகர் அறையிலே போய் உட்கார்ந்து அவர்களோடு பேசி முடித்துவிட்டு அவர்களுக்குத் தேவையான தண்ணீரை பரம்பிக்குளம்— ஆழியாற்றிலிருந்து, மணக்கடவு வழியாகக் கொடுத்துவிட்டுதான் வந்திருக்கிறோம். அதற்காக நான் கொடுக்கிறபோதே, "நீங்கள் இப்படிப் பயிர் காய்ந்தபோது நெய்யாற்றில் விடவில்லையே?" என்று நான் கேட்கவில்லை. காரணம், கொடுக்கிறபோது அதைச் சுட்டிக்காட்டிக் குறை சொல்லக்கூடாது என்று பெருந்தன்மையோடு கொடுத்திருக்கின்றோம். நம்முடைய பெருந்தன்மையை மற்ற அண்டை மாநிலங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் அவர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–55

இந்த அணையைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டு எல்லையில் இருந்து பள்ளிப்பட்டு பகுதிக்கு மேற்கே ஒரு அணை இருக்கிறது. அந்த அணை ஆந்திர எல்லைக்குள் இருக்கிறது. அதில் இருந்து ஒரு கால்வாய் புறப்பட்டு நம்முடைய பள்ளிப்பட்டுப் பகுதிக்குத் தண்ணீர் வரவேண்டும். ஆகவே, அதில் அணை கட்டிவிட்டால் பள்ளிப்பட்டுப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். ஒரு 700 ஏக்கர் நிலம் காய்ந்துவிடும் என்று நம்முடைய இராமன் அவர்களும் தெரிவித்தார்கள். உண்மையும் அதுதான். ஆகையினால், அந்த அணையை ஆந்திர அரசுதான் கட்ட வேண்டும் என்று கருதி, 34.20 கோடி ரூபாயில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அந்த அதிகாரிகள் தள ஆய்வு மேற்கொண்டார்கள். அந்தச் சமயத்தில் அங்கிருக்கிற பாசனதாரர்கள், இந்த அணை கட்டுவதால் பல பாசன நிலங்கள் பாதிக்கப்படும் என்று அவர்கள் பெரும் கிளர்ச்சி செய்த காரணத்தினால், அதை இப்போது ஒத்திவைத்துவிட்டு இருக்கிறார்கள். இப்போது அந்தத் திட்டம் அமலிலே இல்லை. ஆனால், மீண்டும் ஆரம்பிப்பார்களா என்று நான் உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால், தற்போது அணை கட்டுகின்ற திட்டத்தை ஆந்திர அரசு ஒத்திவைத்திருக்கிறது என்றுதான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இல்லை; ஒத்திவைக்கவில்லை கட்ட முற்பட்டிருக்கிறார்கள் என்று மேலும் கேட்டால், ஆந்திர அரசோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, பேச்சுவார்த்தைமூலமோ, சட்டப்படியோ இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

2009 பிப்ரவரி 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மீண்டும் அணை கட்டினால்தான் அதைப்பற்றிப் பேச முடியும் என்கிற வாக்கில் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில் அளித்துள்ளார்கள். இதை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் என்ற எண்ணத்தில், சுமுகமாகவே, முன்பாகவே, இனி அவர் அந்த இடத்தில் அணை கட்டுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற வகையில் அந்த அரசுடன் பேசுவதற்கு நம் அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பாசன நிலங்கள், அந்த அணையைக் கட்ட ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கும் என்பதால், நாம் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு முன்னாலேயே ஆந்திர மக்களே அதற்குப் பெரும் கிளர்ச்சி செய்து, உண்ணாவிரதம், போராட்டங்கள் எல்லாம் நடத்திய காரணத்தால், அவர்களே அதை ஒத்தி வைத்திருக்கிறார்கள். அந்த நிலையிலே போய் நாம், "ஒத்தி வைத்திருக்கிறீர்களே! அதை எப்போது கட்டப்போகிறீர்கள்?" என்று கேட்டு, சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்துவிடக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி எதிர்காலத்திலே அவர்கள் கட்டுவதற்கு எத்தனித்தால் நம்முடைய ஒப்புதலோடுதான் ஆரம்பிக்க வேண்டும் என்று ஒரு நிபந்தனையை அரசு, நீதிமன்றம் மூலமாகவோ அல்லது நான் சொன்னதைப்போல ராஜ ரீதியாகவோ நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

[2009 பிப்ரவரி 26

மாண்புமிகு திரு. துரைமுருகன்: அது இரு மாநிலங்களிலேயும் ஓடுகிற நதி. Inter State River. எனவே, அங்கு அணை கட்டவேண்டுமானால், *1882* ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி நமக்கு எல்லாவிதமான materials–ஐயும் supply செய்து, நாம் பரிசீலித்த பிறகுதான் அவர்கள் கட்ட வேண்டும். அதையும் மீறி கட்டினால், இப்போது எப்படிப் பாலாற்றிலே கட்டுவதற்கு உச்ச நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறோமோ அதே நிலையை அரசு எடுக்கும்.

(உ) நம்பியாற்றின் குறுக்கே மைலாப்புதூரில் உள்ள உடைந்த அணையை மீண்டும் கட்டித் தரக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டப் பகுதி வழியாகச் செல்லும் நம்பியாற்றின் குறுக்கே இருந்த மைலாப்புதூர் அணைக்கட்டு, *2005* ஆம் ஆண்டு உடைந்துவிட்டதால், மீண்டும் அணையைக் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, விதி *55*–ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

நண்பகல் *12–00*

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞருடைய நல்லாட்சியில்தான் வறண்ட நாங்குநேரி, ராதாபுரம் வழியாகச் செல்கின்ற நம்பியாற்றின் குறுக்கே அணையைக் கட்டி, அக்டோபர் இரண்டாம் தேதி, 2000 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களே, தன்னுடைய திருக்கரத்தினால் நேரடியாக அந்த அணையைத் திறந்து வைத்தார். அதே தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்தான், தாமிரபரணி ஆற்றின் வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரும் அந்தப் பகுதிக்கு வர வேண்டும் என்பதற்காக, இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு முன்மாதிரித் திட்டமாக, வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு வருவதற்காக, நதிநீர் இணைப்புத் திட்டத்தைத் தந்து, அதற்கு நிதியையும் ஒதுக்கி, கடந்த 21 ஆம் தேதி Video Conferencing மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு அர்ப்பணித்தார். அதற்காக தலைவர் கலைஞரோடு முழுமூச்சாகச் சிறப்பாகப் பணியாற்றிய நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே